நல்லூர் இள நூலகம்
மாநகர சபை மன்றம்

Registered as a Newspaper | பக்கங்கள் 04 | விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM | மக்கள் தினசரி | Peoples Daily

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | கார்த்திகை 22 | ( 07-12-93 ) | செவ்வாய்க்கிழமை | ஓசை 292

## சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம்; அதிகரித்த விலை நிர்ணயம்

சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் கொழும்பில் இருந்து கப்பல் மூலம் தருவிக்கப்பட்ட சில அத்தியவசியப் பொருள்களை அதிக விலைக்கு விற்பனை செய்து வந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அதிகரித்த விலையில் விற்பனை செய்துவந்தமை கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து மேற்படி அத்தியாவசியப் பொருள்களை நியாய விலையில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கொழும்பில் இருந்து கப்பல் மூலம் கொண்டுவரப்படும் இந்த அத்தியாவசியப் பொருள்களுக்கு அனைத்து செலவுகளும் உட்பட கொழும்பில் கொள்வனவு செய்யப்பட்ட விலையைவிட கிலோவிற்கு நான்கு ரூபா மட்டுமே மேலதிக செலவு ஏற்படுவதாகக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் (4ஆம் பக்கம் பார்க்க)

# விசேட பயிற்சிபெற்ற ராணுவ அதிகாரிகளை

# வடக்கு - கிழக்கிற்கு உடன் அனுப்ப முடிவு!

## உயர்மட்ட மாநாட்டில் தீர்மானம்

(கொழும்பு)

வெளிநாடுகளில் விசேட பயிற்சி பெற்ற சகலதர இராணுவ அதிகாரிகளையும் உடனடியாக வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பிவைப்பதென இராணுவ உயர்மட்டக்குழு தீர்மானித்துள்ளது. அண்மையில் கொழும்பு இராணுவ தலைமை அலுவலகத்தில் வடபகுதி இராணுவ நடவடிக்கைக்கான இணைப்பதிகாரி மேஜர் ஜெனரல் ஜெரிசில்வா தலைமையில் நடைபெற்ற உயர் இராணுவ அதிகாரிகள் மட்டத்திலேயே இத் தீர்மானம் எடுக்கப்பட்டது. இதேவேளை இம் மாநாட்டில் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரெட்னா கலந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதுகுறித்து இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில்,

விசேட பயிற்சி பெற்ற சகல தர இராணுவ அதிகாரிகளையும் உடனடியாக வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பி வைப்பதென இராணுவ உயர்மட்டக்குழு தீர்மானித்துள்ளது என்றார்.

வடக்கு - கிழக்கிலுள்ள இராணுவ முகாம்களை மேலும் விரிவுபடுத்துவது எனவும், முகாம்களிலுள்ள குறைந்த பயிற்சிபெற்ற இராணுவத்தினரை பிறபகுதிகளுக்கு அனுப்பி அங்கு வைத்து மேலதிக பயிற்சி வழங்குவது எனவும், மேலதிக பயிற்சி வழங்கப்பட்ட பின்னர் மீண்டும் வடக்கு கிழக்கு முகாம்களுக்கு அனுப்புவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை புதியவர்களுக்கு வடக்கு கிழக்கிலுள்ள பயிற்சி முகாம்களில் வைத்து பயிற்சி வழங்கப்படுவது நிறுத் (4ஆம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரியில் ஹெலி தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி தனங்கிளப்பு பகுதி மக்கள் குடியிருப்புக்களை நோக்கி நேற்று நண்பகல் வேளையில் சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான உலங்குவானூர்தி ஒன்று 50 கலிபர் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளது.

எனினும் இதனால் சேதம் எதுவும் ஏற்பட்டதாக தெரியவரவில்லை.

## பிரச்சினைக்கு தீர்வுகாண திட்டமொன்று தேவை

–அஸ்கிரியபீட மகாநாயக்கர்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு பரிகாரம் காணக்கூடிய தீர்வுத்திட்டம் ஒன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்று அஸ்கிரிய பீட மகாநாயக்க தேரர் வண. பலிபான சந்தானந்த தேரோ அரசியல் கட்சித் தலைவர்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

பிராங் டி சில்வா மகாநாயக்க தேரரைச் சந்தித்து ஆசி பெறுவதற்குச் சென்ற சமயம் அவருக்கு அநுசாசனம் வழங்கிய மகாநாயக்கர் மேலும் கூறுகையில்; சமர்ப்பிக்கப்படும் தீர்வுகள் தமது நோக்கத்தை தெளிவாக விளக்க வேண்டும் அப்பொழுது தான் அவற்றை ஆதரிக்கலாம் அல்லது மாற்

## கிளாலி போக்குவரத்தில் கடற்படை படகுகள்

(கொழும்பு)

பூநகரியில் கைப்பற்றிய இரு நவீனரக அதிவேக நீருந்து விசைப்படகுகளைக்கொண்டு கிளாலி படகு சேவையை புலிகள் நடாத்தி வருவதாக சிறிலங்கா படை வட்டாரங்கள் கூறியுள்ளன.

இவ் இரு நீருந்து விசைப் படகுகளையும் கொண்டு கடற்புலிகளின் பெண்கள் அணியினர் பொதுமக்கள் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளதாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

## சிங்கள அகதிகள் கல்குடாவில் குடியேற்றம்

(மட்டக்களப்பு)

கல்குடா பொலிஸ் நிலையப் பகுதியில் தற்காலிகமாக தங்கியுள்ள சிங்கள அகதிகளை தமிழ்க் குடும்பங்கள் செறிவாக வாழும் பகுதியில் குடியமர்த்த புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு அதிகாரிகள் முயற்சி எடுத்துள்ளனர்.

கல்குடாவில் வாசிக்கரை ஓரமாக அமைந்திருக்கும் தென்னை அபிவிருத்தி சபைக் காணியிலேயே சிங்கள அகதிக்குடும்பங்களை குடியேற்ற

அரசுடமையான பெரும் விஸ்தீரணப்பரப்பைக் கொண்ட இக்காணி தமிழர்கள் செறிவாக வாழும் பகுதிக்கு மத்தியிலிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

1990 ஜூன் மாதத்தில் தென்பகுதிக்கு இடம்பெயர்ந்து சென்ற சிங்களக் குடும்பங்கள் மீண்டும்வரவழைக்கப்பட்டு பொலிஸ் நிலையத்துக்கு அருகாமையிலுள்ள வலைவாடி பகுதி பழைய கட்டடங்களில் தங்கவைக்கப்பட்

## யுத்தம் தொடர்பான செய்திகளை ஜனாதிபதி செயலாளருக்கு அனுப்புக!

ஒன்று 50கலிபர் தாக்குதல் களை மேற்கொண்டுள்ளது.

எனினும் இதனால் சேதம் எதுவும் ஏற்பட்டதாக தெரியவரவில்லை.

ஜெனரல் ஜெரிசில்வா தலைமையில் நடைபெற்ற உயர் இராணுவ அதிகாரிகள் மட்டத்திலேயே இத் தீர்மானம் எடுக்கப்பட்டது. இதேவேளை இம் மாநாட்டில் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரெட்னா கலந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதுகுறித்து இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில்,

விசேட பயிற்சி பெற்ற சகல தர இராணுவ அதிகாரிகளையும் உடனடியாக வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பி வைப்பதென இராணுவ உயர்மட்டக்குழு தீர்மானித்துள்ளது என்றார்.

வடக்கு - கிழக்கிலுள்ள இராணுவ முகாம்களை மேலும் விரிவுபடுத்துவது எனவும், முகாம்களிலுள்ள குறைந்த பயிற்சிபெற்ற இராணுவத்தினரை பிறபகுதிகளுக்கு அனுப்பி அங்கு வைத்து மேலதிக பயிற்சி வழங்குவது எனவும், மேலதிக பயிற்சி வழங்கப்பட்ட பின்னர் மீண்டும் வடக்கு கிழக்கு முகாம்களுக்கு அனுப்புவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை புதியவர்களுக்கு வடக்கு கிழக்கிலுள்ள பயிற்சி முகாம்களில் வைத்து பயிற்சி வழங்கப்படுவது நிறுத்

(4ஆம் பக்கம் பார்க்க)

லங்கா படை வட்டாரங்கள் கூறியுள்ளன.

தாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

# பிரச்சினைக்கு தீர்வுகாண திட்டமொன்று தேவை

## -அஸ்கிரியபீட மகாநாயக்கர்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு பரிகாரம் காணக்கூடிய தீர்வுத்திட்டம் ஒன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்று அஸ்கிரிய பீட மாகாநாயக்க தேரர் வண. பலிபான சந்தானந்த தேரோ அரசியல் கட்சித் தலைவர்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

புதிய பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ள பிராங் டி சில்வா மகாநாயக்க தேரரைச் சந்தித்து ஆசி பெறுவதற்குச் சென்ற சமயம் அவருக்கு அநு சாசனம் வழங்கிய மகாநாயக்கர்மேலும்கூறுகையில்; சமர்ப்பிக்கப்படும் தீர்வுகள் தமது நோக்கத்தை தெளிவாக விளக்க வேண்டும் அப்பொழுது தான் அவற்றை ஆதரிக்கலாம் அல்லது மாற்றுப் பரிகாரத்தை தெரிவிக்கலாம் என்றும் குறிப்பிட்டார்.

# 35,000 பயிலுனர் ஆசிரியர் ஜனவரியில் நிரந்தரமாவர்

(கொழும்பு)

தற்போது அரசாங்கப் பாடசாலைகளில் பயிலுனர் ஆசிரியர்களாகக் கடமையாற்றிவரும் 35ஆயிரம் பேர் ஜனவரி முதல் நிரந்தரமாக்கப்படுவர் என கல்விச்சேவைகள் சபை வட்டாரங்கள் கூறுகின்றன. இவர்கள் நியமனம் பெற்று நான்கு ஆண்டுகளை 1994 ஜனவரியில் பூர்த்தி செய்வதால் இவர்களை நிரந்தரமாக்க கல்விச் சேவைகள் சபை அமைச்சின் அனுமதியைக் கோரியுள்ளது. இவர்கள் நியமனம் பெற்று நான்குவருடங்களில் நிரந்தரமாக்கப்படுவர் என்ற நிபந்தனையின் பேரில் நியமனம் செய்யப்பட்டவர்கள் ஆவர். இவர்களில் பலர் இப்போது தொலைக்கல்விமூலம் பயிற்சி பெற்றுள்ளனர் எனவும் இவர்களுக்கு பயிற்சி ஆசிரியர் நியமனம் வழங்கப்படும் எனவும் கல்விச் சேவை வட்டாரங்கள் கூறின

# திருமலையில் மூன்று தமிழ் மீனவரை காணவில்லை

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் கடலில் மீன்பிடிக்க சென்ற மூன்று தமிழ் மீனவர்கள் காணாமல் போயுள்ளனர் கடந்த வியாழக்கிழமை அதிகாலை மீன்பிடிக்கச் சென்ற மூன்று மீனவர்கள் திரும்பிவரவில்லை எனவும் அவர்களது உறவினர்கள் நீண்டநேரம் கடலில் தேடிய பொழுதும் அவர்களைக்காண வில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் சிறிலங்கா கடற்படையினராலோ அல்லது தேசவிரோத குழுக்களாலோ கைதுசெய்யப்பட்டிருக்கலாம் என உறவினர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

# யுத்தம் தொடர்பான செய்திகளை ஜனாதிபதி செயலாளருக்கு அனுப்புக!

## ஜனாதிபதி டி.பி. உத்தரவு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு யுத்தம் தொடர்பாக நாளாந்தம் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கை தலைமை அலுவலகத்திற்குஅனுப்பிவைக்கப்பட்டுக்கொண்டிருந்த அறிக்கைகள் அனைத்தும் ஜனாதிபதியின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என சிறிலங்கா ஜனாதிபதி டி பி. விஜேதுங்க உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இதுவரை காலமும் வடக்கு கிழககில் நடைபெறும் சம்பவங்கள்; இராணுவத்தினரின் பிரச்சினைகள் தொடர்பான அறிக்கைகள், நடவடிக்கை தலைமை அலுவலகத்திற்கே அனுப்பிவைக்கப் பட்டன. ஆனால் இவ் அறிக்கைகள் இனிமேல் ஜனாதிபதியின் செயலாளருக்கு மட்டும் அனுப்பி வைக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# பழிவாங்கும் நோக்கில் விமானப்படை தாக்குகிறதுஎன்பதில் சந்தேகமில்லை!

பூநகரி இராணுவ முகாமில் பல நூற்றுக்கணக்கான இராணுவத்தினரும் கடற்படையினரும் கொல்லப்பட்டதற்குப் பழிவாங்கும் நோக்குடன் பாதுகாப்புப்படையினர் யாழ்குடாநாட்டின் மீது விமானத் தாக்குதலைத் தொடங்கியுள்ளனர் என்பதில் சந்தேகமில்லை என்று பி. பி. ஸி அதன் செய்திக் கண்ணோட்டத்தில் தெரிவித்தது.

யாழ்குடா நாட்டில் விமானப் படையினர் மேற்கொண்டு வரும் தொடர் தாக்குதலில் ஒருசம்பவத்தில் பொது மக்கள் 26 பேர் கொல்லப்பட்டதாக யாழ்ப்பாணத்திலிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன. சென்ற வார இறுதியில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக இராணுவ அதிகாரிகள் ஒப்புக்கொண்டனர். புலிப்படையினரின் முகாம்கள் அழிக்கப்பட்டதாக இராணுவம்தெரிவித்தது என்றும் இராணுவத்தை மேற்கோள் காட்டி பி. பி. ஸி அறிவித்தது.

அச் செய்தியில் மேலும்; பூநகரி முகாம் தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் பாதுகாப்புப் படையினர் இந்த வான்வெளித் தாக்குதல்களைத் தொடங்கி உள்ளனர் என்பதில் சந்தேகமில்லை.

புலிப்படை முகாம் ஒன்று அழிக்கப்பட்டதாகக் கொழும்பில் உள்ள இராணுவ அதிகாரிகள் கூறுகின்றனர். குண்டுத் தாக்குதல் நடந்த பகுதிகளில் வாழும் மக்கள் சொல்லும் கதை வேறு. விமானப் படை யாழ்ப்பாணநகரில் உள்ள மூன்று மீனவர் நகரங்கள் மீது தாக்குதல் நடத்தியதாகவும், தாக்குதல்களில் பொதுமக்கள் 26பேர் கொல்

(4ஆம் பக்கம் பார்க்க)

# கிளாலி-பூநகரி படகுச் சேவை

கிளாலி-பூநகரி படகுச் சேவை இன்றும் நாளையும் வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

# உருவப்படம் உள்ளே ->

பூநகரி-நாகதேவன்துறை கூட்டுத்தளம் மீதான தாக்குதலில் வீரச்சாவடைந்த தென்மராட்சிக்கோட்ட சிறப்புப் பொறுப்பாளர் லெப். கேணல் குணாவின் உருவப்படம் உள்ளே....

# சிங்கள அகதிகள் கல்குடாவில் குடியேற்றம்

(மட்டக்களப்பு)

கல்குடா பொலிஸ் நிலையப் பகுதியில் தற்காலிகமாக தங்கியுள்ள சிங்கள அகதிகளை தமிழ்க் குடும்பங்கள் செறிவாக வாழும் பகுதியில் குடியமர்த்த புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு அதிகாரிகள் முயற்சி எடுத்துள்ளனர்.

கல்குடாவில் வாசிக்கரை ஓரமாக அமைந்திருக்கும் தென்னை அபிவிருத்தி சபைக் காணியிலேயே சிங்கள அகதிக்குடும்பங்களை குடியேற்ற முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

அரசுடமையான பெரும் விஸ்தீரணப்பரப்பைக் கொண்ட இக்காணி தமிழர்கள் செறிவாக வாழும் பகுதிக்கு மத்தியிலிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

1990ஜூன் மாதத்தில் தென்பகுதிக்கு இடம்பெயர்ந்து சென்ற சிங்களக் குடும்பங்கள் மீண்டும்வரவழைக்கப்பட்டு பொலிஸ் நிலையத்துக்கு அருகாமையிலுள்ள வலைவாடி பகுதி பழைய கட்டடங்களில் தங்கவைக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

# கொழும்பு விடுதிகளில் பதிவுசெய்யாது தங்குவோர்: கண்டுபிடிக்க குழு

(கொழும்பு)

கொழும்பு நகரிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் உள்ள விடுதிகளில் தங்கியிருப்பவர்கள் தொடர்பான தகவல்களை அருகில் உள்ளபொலிஸ் நிலையத்தில் பதிவு செய்து கொள்ளவேண்டும் என்று பொலிஸ்திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவ்வாறு விடுதிகளில் தங்கியிருப்பவர்கள் குறித்து பொலிஸ் நிலையத்தில்தகவல்களைப் பதிவுசெய்து கொள்ளத் தவறும் விடுதி உரிமையாளர்கள் மீது பொலிசாரால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இப்பொலிஸ்அதிகாரி தெரிவித்தார்.

மேற்படி உத்தரவை நடை

(4ஆம் பக்கம் பார்க்க)

# படையினர் நஷ்ட ஈட்டை இரண்டரை லட். உயர்த்துக!

## சுதந்திரக் கட்சி உறுப்பினர் கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு யுத்தத்தில் இறக்கும் படையினருக்கு வழங்கப்படும் நஷ்ட ஈட்டை ரூபா இரண்டரை லட்சமாக அதிகரிக்குமாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பியசேன கமகே தெரிவித்துள்ளார்.

இப்போது நஷ்ட ஈடாக வழங்கப்படும் ரூபா ஒரு லட்சம் போதாது எனவும் இதனை உடனடியாக அதிகரிப்பதே அவர்களுக்கு செய்யும் நன்றி என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கிளிநொச்சியில் புக்காரா தாக்குதல் ஐவர் காயம்; வீடுகள் சேதம்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சிப் பகுதியில் நேற்றுக்காலை சிறிலங்கா விமானப் படை விமானங்கள் மூன்று இடங்களில் குண்டு வீச்சு நடத்தின. இத்தாக்குதலில் ஐவர் காயமடைந்ததுடன் வீடுகள் சேதமடைந்தன

கிளிநொச்சிப் பகுதியைச் சுற்றி வட்டமிட்ட இரு புக்காரா விமானங்கள் முதலில் கனகாம்பிகை குளத்திற்கு அருகாமையில் குண்டுவீச்சை நடத்தின. இதனால் வீடொன்று முற்றாகச் சேதமடைந்தது. முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்த நிஷாந்தும் (வயது 3), அவரது தாயாரும் படுகாயமடைந்தனர்.

கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அவர்கள் எடுத்துச் செல்லப்பட்டு வைத்திய வசதிகள் இல்லாமையால் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டனர். மேற்படி சம்பவத்தில் இன்னும் மூவர் காயமடைந்தனர். அவர்கள் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

இந்தக் குண்டுவீச்சு நடைபெற்ற வேளையில் கிளிநொச்சி விவசாய பீடத்தில் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருந்தது. குண்டு வீச்சை அடுத்துப் பரீட்சை குழம்பியதுடன் மாணவர்கள் சிதறி ஓடினர்.

(4ஆம் பக்கம் பார்க்க)

# சமூகசேவைப் பிரிவிற்கு எதிராக கூட்டுறவு சங்கங்கள் போர்க்கொடி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு யாழ். செயலக சமூக சேவைப்பிரிவு வழங்க வேண்டிய பல லட்சம் ரூபா வருமதியை செலுத்த நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் சமூக சேவைப் பிரிவை இயங்கவிடாது மறியல் செய்யப்போவதாக யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவுச் சபை அறிவித்துள்ளது.

மாணவ உணவு முத்திரை, வறுமை நிவாரண முத்திரை என்பன ஒப்படைத்த வகையால் பல லட்சம் ரூபா வருமதியாக உள்ளது எனவும் இது தொடர்பாக சமூக சேவை உதவிப் பணிப்பாளருடன் நேரடியாக தொடர்பு கொண்டும் வருமதியினைப் பெறமுடியவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

[illegible]

தாம் திகதிக்கு முன்னர் பல நோ. கூ. சங்கங்களுக்கு வருமதியான பணத்தைச் செலுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்காதுவிடின் எதிர்வரும் பத்தாம் திகதி வெள்ளிக்கிழமை சமூக சேவை காரியாலயத்தை இயங்கவிடாது மறியல் செய்வது என தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் யாழ். மாவட்டக் கூட்டுறவுச்சபை அறிவித்துள்ளது.

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

திருமதி வி. முத்தையாவின் ஒய்வூதியப் பட்டியல் மானிப்பாயில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மெமோறியல் பாடசாலை முன்பாக P. சிவகுமார் (கோழிப்பண்ணை) என்ற முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.
(6793)

### ரிசேவ் பொலிசாருக்கு இலவச பயணசலுகை

ஜனவரி மாதத்திலிருந்து ரிசேவ் பொலிஸார் இலவச பஸ் சலுகை பெறுவார்கள். இதனால் 30,000 பேர் பயனடைவர் வீட்டுக்கும் பொலிஸ் நிலையத்திற்குமிடையில் இவர்கள் இந்த இலவச சலுகையை பெறுவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

### வயல்களில் வெள்ளம்

(கொழும்புத்துறை)

யாழ். குடாநாட்டில் கடந்த ஒரு வாரமாக தொடர்ந்து பெய்துவரும் பெரும் மழையால் வயல்கள் வெள்ளக்காடாக காட்சியளிக்கின்றன.

பெரும்பாலான இடங்களில் தாழ்ந்த நிலப்பகுதி மக்கள் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (24)

### களைகொல்லிக்கு தட்டுப்பாடு

(கொழும்புத்துறை)

விவசாயிகள், நெற் பயிர் ஊடாக வளரும் களைகளைக் கட்டுப் படுத்த பயன்படும் 3.4 டி. பி. ஏ, எம். சி. பி. போன்ற களை கொல்லிகளுக்கு யாழ் குடா நாட்டில் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதில் 3, 4 டி. பி. ஏ. களை கொல்லி நெற்பயிர் முளைத்து 14 முதல் 21 நாள் வரை வளரும் நெற்சப்பி, கோழிச்சூடன் போன்ற களைகளை கட்டுப்படுத்த பயன் படும்.

ஆனால் இதனைப் பாவிக்க வேண்டிய கால எல்லை தற்போது முடிவடைந்து விட்டதால் 21 முதல் 28 நாட்களுக்குள் கிடைச்சி, கோரை போன்ற அகன்ற இலைக் களைகளை கட்டுப்படுத்தப் பாவிக்கப்படும் களைகொல்லியான எம். சி. பியை ஆவது கிளிநொச்சியில் இருந்து தருவிக்க நடவடிக்கைகள் மேற்கொளப்பட்டுள்ளதாக யாழ் மாவட்ட விரிவாக்க உதவி விவசாயப் பணிப்பாளர் திரு. க. சிவலோகநாதன் தெரிவித்

## அதிர்ஷ்டம் பிற்போடப்பட்டது

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளன அபிவிருத்தி நிதிக்காக 1993-12-06-ந் திகதியன்று அதிர்ஷ்டம் பார்க்கப்படவிருந்த நிகழ்வை தவிர்க்க முடியாக் காரணங்களால் 1993-12-27-ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதனை அறிவிக்கின்றோம்.

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின்
சம்மேளனம்

இல. 33, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
1993-12-06 (6797)

காரைநகர்
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரைவுள்ளது)
374, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

## முக்கிய அறிவித்தல்

### வருடாந்தப் பொதுக்கூட்டம்

மேற்படி கூட்டம் தலைவர் திரு. கோ. விக்னேஸ்வரன் அவர்கள் தலைமையில் 11-12-93 சனிக்கிழமை மு. ப. 9-00 மணிக்கு பண்ணாகம் கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் நடைபெறும். இச் சங்கத்தின் பொதுச்சபை பிரதிநிதிகளால் தரப்பட்ட முகவரிக்கு நிகழ்ச்சிநிரல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. நிகழ்ச்சிநிரல் கிடைக்கப்பெறாத பொதுச்சபை பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்தில் உள்ள சங்கத் தலைமைக் காரியாலயத்தில் நிகழ்ச்சிநிரல் கடிதத்தைப் பெற்றுக்கொள்ளவும்.

க. நடராசா,
செயலாளர்.
3-12-93
(சி-8072)

## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

யாழ் மாவட்டம்

### ஆண்டு இறுதி பொதுக் கூட்ட நேர மாற்ற அறிவித்தல்


இடம்:- புதிய விஞ்ஞான கல்விக் கழகம்
(எழிலகம் முன்பாக)
காலம்:- 8 - 12 - 93 புதன் காலை 10.00 மணி

சகல கோட்ட நிறுவன இயக்குநர்களும் ஆசிரியர்களும் தவறாது வருகை தருமாறு வேண்டுகின்றோம்.

- பொதுச் செயலாளர்
யாழ் மாவட்டம்
(சி - 8072)

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
26 - 04 - 1926



மறைவு
08-11-1993

அமரர்
### வேலுப்பிள்ளை சபாரட்ணம்
(கதிரிப்பாய் அச்சுவேலி)

08-12-1993 புதன்கிழமை எமது மயிலியதனை இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையில் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன்அழைக்கிறோம்.

அன்னாரின் மறைவின்போது எமது துயரில் பங்கேற்றோருக்கும், அன்னார் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் நோய்வாய்ப்பட்டிருந்த காலத்தில் உதவி புரிந்த வைத்தியர்கள், தாதியர்கள், ஊழியர்கள் மற்றும் சகல உதவிகளும் புரிந்த அனைவருக்கும் எமது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்
மயிலியதனை, - குடும்பத்தினர்
வல்வெட்டித்துறை. (6762)

## 1-ம்ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு:
21-11-1978

வீரச்சாவு:
07-12-1992

### வீரவேங்கை குயிலன்
(கந்தசாமி சுதாகரன்)

பைந்தமிழின் விடிவிற்காய்
பாலகனாய் எழுந்தவனே!
செந்தமிழின் விலங்குடைக்கச்
செருக்களத்தில் புகுந்தவனே!
சொந்த மண் அவலங்களைச்
சொந்தமெனச் சுமந்தவனே! - பள்ளிச்
சோலைக்குள் குயிலாகப்
பாடித்திரிந்தவனே!

## 72 ஆரம்ப விஞ்ஞான, கணித பயிலுனர் ஆசிரியர் தெரிவு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் எழுபத்தியிரண்டுபேர் ஆரம்ப விஞ்ஞான கணித பயிலுனர் ஆசிரியர்களாக தெரிவாகியுள்ளனர் என்று ஈழநாதத்திற்கு கிடைத்த தகவல் ஒன்று தெரிவிக்கிறது.

தெரிவாகியுள்ள 72 பேர்களது தராதரங்களையும் மீளப் பரீட்சிப்பதற்கு மாவட்ட கல்விப்பணிப்பாளருடன் இரு கல்வி அதிகாரிகளைக் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது இக்குழு கல்விப்பிரிவுகளின் அடிப்படையில் தெரிவானோரை மீளப் பரீட்சிப்பார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ் குடாநாட்டில் மட்டும் 13 பேர் ஆரம்ப விஞ்ஞான, கணித பயிலுனர் ஆசிரியர்களாக தெரிவாகியுள்ளனர்.

அவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு;

பளை பிரிவில், செல்வி வீ. மனோரஞ்சிதமலர் (தாயகம் பலாலி), செல்வி எஸ். கௌசல்யா (178, துன்னாலை தெற்கு), பீ. நந்தரூபன் (இலக்கம் 58, வை. எம். சீ. ஏ. இயக்கச்சி), கே. சிவபாலன் (அல்லிப்பளை), செல்வி வனஜா (கண்டி வீதி, இயக்கச்சி).

யாழ் பிரிவில், செல்வி எல். எஸ்.ஆர். வேதநாயகம் (இலக்கம் 7, பிரஸ் வீதி, யாழ்ப்பாணம்), செல்வி எஸ். சீ. சூரியபிள்ளை (54/1 ரேகா வீதி, யாழ்ப்பாணம்).

நல்லூர்பிரிவில், வை. ஜெயந்திதேவி (224/3 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்), செல்வி ஆர். இரத்தினவதி (859, கே. கே எஸ் வீதி, யாழ்ப்பாணம்), மற்றும் ஏ. ஜெகதீஸ்வரன் (பழைய கண்டி வலந்தலை காரைநகர்), எஸ் கைவான் (தில்லையார் வளவு, அல்லைப் பத்தி, கரவெட்டி

இவர்களுடன் வேறு இரு முஸ்லிம்களின் பெயரும் இடம் பெற்றுள்ளன.

### சைக்கிள் திருட்டு

நள்ளிரவு வேளையில் சைக்கிள் திருடப்பட்டுள்ளது. யாழ். ஆனைப்பந்தி பேக்கரியில் வாசலில் விடப்பட்ட பேக்கரி ஊழியரின் சைக்கிள் திருடப்பட்டது.

## 31-ம்நாள்நினைவுஅஞ்சலி

செல்வி
### நேசரத்தினம் சுப்பிரமணியம்

தோற்றம்: 17-04-1921 மறைவு: 06-11-1993

எங்கள் கல்லூரியில் 08-09-1952 — 18-04-1980 வரை ஆசிரியராக, உப அதிபராகக் கடமையாற்றி 06-11-93 இல் இறைவனடி சேர்ந்த செல்வி நேசரத்தினம் சுப்பிரமணியம் அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர், ஊழியர்,
பழைய மாணவர் சங்கம்.
யா | மெதடிஸ்த பெண்கள் உயர் பாடசாலை,
பருத்தித்துறை. (6787)

## நினைவு கூருகின்றோம்... 1993-12-07

1988ஆம் ஆண்டு இதே தினத்தில் பருத்தித்துறை, மாதனைப் பகுதியில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

லெப். அசோக் (சிவகுரு சிறிதரன் - கட்டுவளை, புலோலி மேற்கு - பருத்தித்துறை)

1990ஆம் ஆண்டு யாழ் - கட்டுவன் பகுதியில் சிறீலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய-

போன்ற களை கொல்லிகளுக்கு யாழ் குடா நாட்டில் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதில் 3, 4 டி. பி. ஏ. களை கொல்லி நெற்பயிர் முளைத்து 14 முதல் 21 நாள் வரை வளரும் நெற்சப்பி, கோழிச் சூடன் போன்ற களைகளை கட்டுப்படுத்த பயன்படும்.

ஆனால் இதனைப் பாவிக்க வேண்டிய கால எல்லை தற்போது முடிவடைந்து விட்டதால் 21 முதல் 28 நாட்களுக்குள் கிடைச்சி, கோரை போன்ற அகன்ற இலைக் களைகளை கட்டுப்படுத்தப் பாவிக்கப்படும் களைகொல்லியான எம். சி. பியை ஆவது கிளிநொச்சியில் இருந்து தருவிக்க நடவடிக்கைகள் மேற்கொளப்பட்டுள்ளதாக யாழ் மாவட்ட விரிவாக்க உதவி விவசாயப் பணிப்பாளர் திரு. க. சிவலோகநாதன் தெரிவித்துள்ளார் (24)

## உலர் உணவு நிவாரணம் வழங்கல்

(தொல்புரம்)

குடாநாட்டில் அண்மையில் ஏற்பட்ட பெருமழையினால் பாதிக்கப்பட்ட வறிய குடும்பங்களுக்கு நிவாரணமாக உலர் உணவுவழங்கப்பட்டது

தொல்புரம் மேற்கு வீராவத்தை கிராமத்தைச் சேர்ந்த, மழை வெள்ளத்தினால் அதிசம் பாதிப்புக்குள்ளான 24 குடும்பங்களின் அவலநிலையை நேரில் சென்றுபார்வையிட்ட இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினர் 132 மக்களுக்கு மூன்று நாட்களுக்கு போதுமான இலவச உலர் உணவு வகைகளை மேற்படி சங்க வலிமேற்கு சங்கானை கிளையினர் ஊடாக வழங்கியுள்ளனர். (41)

## எறிகணை வீச்சு

(தொல்புரம்)

காரைநகரில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா ஆயுதப் படையினர் தமதுகாவல்நிலைகளிலிருந்து நேற்று முன்தினம் அதிகாலை 5 மணியளவில் பொன்னாலை, மூளாய் பகுதிகளை நோக்கி அகோர எறிகணை வீச்சினை மேற்கொண்டனர்.

சுமார் பத்திற்கு மேற்பட்ட எறிகணைகள் மேற்படி பகுதிகளை நோக்கி ஏவப்பட்டன. அவ்வேளை தொழிலிற்கு ஆயத்தமான மீனவர்கள் தமது உயிர்களை பாதுகாக்கும் பொருட்டு பாதுகாப்பான இடங்களை தேடி பதுங்கிக் கொண்டனர். இவ் எறிகணைகள் பொன்னாலைக் கடற்கரையை அண்மித்த பகுதிகளிலும், தெற்கு மூளாய் வயல் வெளிகளிலும் வீழ்ந்து வெடித்ததினால் உயிர்ச் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை எனத் தெரிய வருகிறது (41)

---

## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

யாழ் மாவட்டம்

### ஆண்டு இறுதி பொதுக் கூட்ட நேர மாற்ற அறிவித்தல்

இடம்:- புதிய விஞ்ஞான கல்விக் கழகம் (எழிலகம் முன்பாக)

காலம்:- 8-12-93 புதன் காலை 10.00 மணி

சகல கோட்ட நிறுவன இயக்குநர்களும் ஆசிரியர்களும் தவறாது வருகை தருமாறு வேண்டுகின்றோம்.

– பொதுச் செயலாளர்
யாழ் மாவட்டம்

(சி - 8072)

---

## முக்கிய அறிவித்தல்

### கமஇரசாயன, உர விற்பனையாளர்கள் கவனத்திற்கு,

03-12-1993 அன்று நடைபெற்ற சங்கக்கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானித்ததற்கிணங்க பாவனையாளரின் நன்மை கருதி சகல கமஇரசாயன விற்பனையாளர்களும்10-12-1993க்கு முன்னர் தங்கள் கமஇரசாயன இருப்பு நிலையை இரட்டைப் பிரதியில் சங்கத் தலைவருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். மற்றும் தடை செய்யப்பட்ட, மட்டுப்படுத்தப்பட்ட கம இரசாயனங்களை விவசாயப் போதனாசிரியரின் சிபார்சுக் கடிதம் பெற்று மட்டும் விற்பனை செய்தல் வேண்டும். சகல கம இரசாயனங்களும் உற்பத்தியாளர்களால் போத்தலில் குறிப்பிடப்பட்ட விலைக்கே விற்பனை செய்தல் வேண்டும் என்பதும் சகலருக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

கமஇரசாயன, உர விற்பனையாளர் சங்கம்.

(6792)

---

## Jaffna College

**Wanted Teachers for the following subjects**

1. Pure Maths, Applied Maths, Physics and Statistics for Adv level classes. Applicants holding Special Degrees. Preferred.
2. History for yr 10 and yr XI Classes.
3. Primary trained teachers to teach yrs 1-3 Retired Teachers can also apply.

Please apply before 13th Dec. to the Principal Jaffna College Vaddukoddai.

G. Rajanayagam
Principal

(சி-8063)

---



பிறப்பு:
21-11-1978

வீரச்சாவு:
07-12-1992

## வீரவேங்கை குயிலன்

(கந்தசாமி சுதாகரன்)

பைந்தமிழின் விடிவிற்காய்
பாலகனாய் எழுந்தவனே !
செந்தமிழின் விலங்குடைக்கச்
செருக்களத்தில் புகுந்தவனே !
சொந்த மண் அவலங்களைச்
சொந்தமெனச் சுமந்தவனே ! - பள்ளிச்
சோலைக்குள் குயிலாகப்
பாடித்திரிந்தவனே !
உந்தனைப் பிரிந்தின்று
ஓராண்டே என்றாலும் ... ... !
ஓயாத உன் நினைவால்
உணர்வு பெற்று - நீ
தேடிய சுதந்திரத்தின் எல்லைகளை நாமும்
தேடுகின்றோம் ... ... !
தெரியுமட்டும் ஓயமாட்டோம் !

வயாவிளான். - போராளி நண்பர்கள்.

(சி-8073)

---

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு: | | உதிர்வு: |
|---|---|---|
| 14 — 11 — 1937 |  | 17 — 12 — 1992 |

அமரர் திரு.

### முத்தையா பாலசுப்பிரமணியம்

(முன்னாள் அதிபர், வவுனியா இலங்கைத் திருச்சபைத் தமிழ்க் கலவன் பாடசாலை, முன்னாள் தலைவர், சுத்தானந்த இந்து இளைஞா சங்கம் - வவுனியா)

திதி- 7 - 12 - 93

அன்பினுக்கோர் அணிகலமாய் அன்றாடம்
எம்முடனே
பண்புடனே பழகிவந்த பண்பாளர் எமைப்பிரிந்து
மண்சுமந்த சிவன் பாதத்தை மார்கழியில் மருகினியோ
கண்பிரிந்த நிலையில் நாங்கள் கதறுவது
கேட்கலையோ!

கல்வி அது கற்றவர்கள் எல்லோரும் அறிஞர் அல்லர்
கற்றவற்றை மற்றவர்கள் கனிவாக கேட்கும்படி
நற்றமிழால் நயமாக பேசுகின்ற நல்லவரே-நாம்உமது
சொற்றமிழை சுவைப்ப தெப்போ தினி!

அரசடி வீதி,
கந்தர்மடம்.
யாழ்ப்பாணம் மனைவி, மக்கள்

(6789)

---

06-11-93 இல் இறைவனடி சேர்ந்த செல்வி நேசரத்தினம் சுப்பிரமணியம் அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர், ஊழியர்,
பழைய மாணவர் சங்கம்.
யா/மெதடிஸ்த பெண்கள் உயர் பாடசாலை,
பருத்தித்துறை. (6787)

---

## நினைவு கூருகின்றோம்...

## 1993-12-07

1988ஆம் ஆண்டு இதே தினத்தில் பருத்தித்துறை, மாதனைப் பகுதியில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**லெப். அசோக்** (சிவகுரு சிறிதரன் - கட்டுவளை, புலோலி மேற்கு - பருத்தித்துறை)

1990ஆம் ஆண்டு யாழ் - கட்டுவன் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய-

**கப்டன் கடாபி** (தங்கவேல் பாபு - சிவகுமரன் வீதி, அரியாலை - யாழ்)

திருமலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**நாயன்-நாயர்** (செல்லத்துரை துரைராசா - காட்டுக்குளம், திரியாய் - திருமலை)

மன்னார் நானாட்டான்பகுதியில் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் கொல்லப்பட்ட அதே இடத்தைச் சேர்ந்த மாணவன்.

1991ஆம் ஆண்டு அச்சுவேலி, வளலாய்ப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

வடமராட்சி தாக்குதல் படைப்பிரிவின் தளபதி,

**மேஜர் இளங்கோ** (வல்லிபுரம் மன்மதநாதன்- கப்புது, கரவெட்டி - யாழ்)

**2-ம் லெப். சின்னத்தம்பி** (கணபதிப்பிள்ளை சண்முகம் - புலோலி மேற்கு - பருத்தித்துறை)

பலாலி முகாமிலிருந்து முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினரை இடைக்காட்டுப் பகுதியில் வழிமறித்து மேற்கொண்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

**அருளாளன்-அருளானந்தன்** (இரத்தினம்உதயகுமார் (சீலன்) - கெருடாவில் தெற்கு, தொண்டமானாறு - யாழ்)

துணைப்படை வீரர்,

**ரவி** (சோ. செல்வேந்திரன் - பொலிகண்டி - வல்வெட்டித்துறை)

கொக்கட்டி, இலக்கந்தை, உப்புவெளி, கூனித்தீவு ஆகிய பகுதிகளைச் சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினரால் சுடப்பட்டுக் காயமடைந்தநிலையில் உயிருடன் தீமூட்டிக் கொல்லப்பட்ட தமிழர்.

அச்சுவேலி, தொண்டமானாறு வீதி, கதிரிப்பாயில் இடம்பெயர்ந்து ஓடிக்கொண்டிருந்தவர்கள் மீது சிறிலங்காவிமானப்படையினரின் விமானக்குண்டு வீச்சில் கொல்லப்பட்ட 3 தமிழர்கள். அச்சுவேலி, கதிரிப்பாய், இடைக்காடு, பத்தமேனிப் பகுதிகளில் சிறிலங்காப்படையினரின் கண்மூடித்தனமான எறிகணைவீச்சில் கொல்லப்பட்ட 3 தமிழர்கள்.

உடுப்பிட்டிப்பகுதியில் சிறிலங்கா விமானப்படையினர் விமானத்திலிருந்து மேற்கொண்டகுண்டுவீச்சில் பலியான வியாபாரி

1992-ம் ஆண்டு யாழ் மாவட்டத்தில் சுகவீனம் காரணமாக எமைப்பிரிந்த,

**குயிலன்** (கந்தசாமி சுதாகரன்-வசாவிளான்-யாழ்)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி 8070)

நல்லூர் ... லகம்
... யாழ்ப்பாணம்

சிந்தனைக்கு

குண்டுகளில் இருக்கும் வெடி மருந்தின் சத்தத்தை விடவும் அதிகம், கருத்துகளில் உள்ளது.

--- ஜான் ஹெய்ல்ஸ் வின்ஸெலன்ட்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 07-12-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
த. பெ. எண் - 05

## தூண்களாக அல்ல கருவிகளாக..

குடியிருப்புக்கள் மீதும், பொது இடங்கள் மீதுமான குண்டுவீச்சை நிறுத்துமாறு சிறிலங்கா அரசாங்கத்திடம் யாழ். அரச அதிபர் கோரிக்கை விடுத்து இரண்டு தினங்களில், சிறிலங்கா விமானப்படை நடத்திய குண்டு வீச்சில் அப்பாவிகளான 25 பேர் இறந்து போயுள்ளனர், 70க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

அதுமாத்திரமல்ல கடந்த மாதம் யாகப்பர் தேவாலயத்தின் மீதும், ஏனைய பொது நிலையங்கள் மீதும் சிறிலங்கா விமானப்படையினர் நடத்திய குண்டுவீச்சைக் கண்டித்தும், இனிமேல் அவ்வாறான தாக்குதல்களை நிறுத்த வேண்டும் எனக் கோரியும், நடத்தப்பட்ட மௌனப் பேரணியும், அதைத் தொடர்ந்துஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றும் அனுப்பப்பட்டு இரண்டு தினங்களுக்குள் அதே பகுதியில் விமானத் தாக்குதலை சிறிலங்கா விமானப்படை நடத்தியுள்ளது.

யாழ். அரச அதிபர் குண்டுவீச்சை நிறுத்துமாறு கோரியது ஒரு சாதாரண அதிகாரியையோ அன்றி இராணுவ தளபதியையோ அல்ல. சிறிலங்கா ஜனாதிபதிக்கு அடுத்ததாக அதிகாரம் கொண்டவரான பிரதம மந்திரியிடம். ஆனால், அரச அதிபரின் கோரிக்கையை பிரதமர் ரணில் கேட்டுக் கொண்ட போதும் யாழ்ப்பாணத்தில் குடிச்செறிவு அதிகமுள்ள குருநகர்-பாஷையூர் பகுதியில் குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்நிலையானது பிரதமர் ரணில் அரச அதிபரின் கோரிக்கைகளை செவிமடுத்தாரா என்ற சந்தேகத்தையே தோற்றுவித்துள்ளது. மேலும் உத்தியோகப் பற்றற்ற பாதுகாப்பு இராஜாங்க அமைச்சராக ரணில் செயற்படுகையில் இத்தாக்குதல்கள் அவரை மீறி நடந்திருக்கவும் முடியாது.

இதேபோன்றே சிறிலங்கா ஜனாதிபதியும் நடந்து கொண்டுள்ளார். ஆனால் பிரதமர் ரணில் கேட்டதை மறந்தாரென்றால், ஜனாதிபதி பார்த்ததை மறந்தார் என்றே கூறவேண்டும். யாகப்பர் ஆலயம் மீதான குண்டுவீச்சைக் கண்டித்து மக்கள் நடத்திய பேரணியும், ஜனாதிபதிக்கு அனுப்பிய மகஜரும் அவருக்குக் கிடைக்கப்பெற்ற சில மணி நேரத்திற்குள்ளேயே குடாநாட்டின் மீது மிலேச்சத்தனமான தாக்குதல் நடத்தப்பட்டது

## புலிகளின் வானொலியை அனுமதிக்கமுடியாது!

(கொழும்பு)

புதிய ஒலிபரப்பு ஒன்று ஆரம்பித்து புலிகளின் குரலை அடக்குவோம் என்று பாராளுமன்ற உறுப்பினர் ஹட்சன் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

புலிகளின் குரல் வானொலியை நாம் தொடர்ந்தும் அனுமதிக்கமுடியாது-அதற்கு இடமளிக்கும் மடத்தனத்தை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

புலிகளின் ஆதிக்க எல்லைக்குள் எமது குரல் செல்ல வேண்டும் அதற்கென ஒலிபரப்பு ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பலாலி இராணுவ முகாமில் மேலும் 15 பேர் தடுப்பு

(வடமராட்சி)

பலாலி சிறிலங்கா இராணுவ முகாமில் மேலும் 15 பேர் இன்னமும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களது பெயர் விபரம் பின்வருமாறு: மு. உதயகுமார் (தாளையடி), பி. ரஞ்சநாதன் (தாளையடி), ச. றொபேட் (மண்டைதீவு), கணேசலிங்கம் (பூநகரி), இன்பம் (மண்டைதீவு), வை. சிவஞானம் (வவுனியா), ஜெனீசியஸ் (மண்டைதீவு), சி. சூரியன் (பளை), மை. லோறன்ஸ் (திருக்கோணமலை), த. சிவானந்தன் (சுளிபுரம்), சோதிநாதன் (காரைநகர்), முருகேசு (காரைநகர்), ம. திருச்செல்வம் (மட்டக்களப்பு), மு. சாந்தகுமார் (மன்னார்), ம. சௌந்தரராசன் (மட்டக்களப்பு).

இவர்கள் ஒரு வருட கால எல்லைப் பகுதிக்குள் இராணுவ சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்டவர்கள் இவர்கள் அனைவரும் பெப்ரவரி 4ஆம் திகதி விடுவிக்கப்படுவர் என எதிர்பார்க்கப்படுகிறது. (யோ)

## காங்கிரஸ் தலைவர்கள் இந்தியா பயணமாகினர்

(கொழும்பு)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின்தலைவர்கள் தனிப்பட்ட விஜயங்களை மேற்கொண்டு இந்தியா சென்றுள்ளனர். இ.தொ.கா தலைவரும் அமைச்சருமான தொண்டமான் கடந்த வெள்ளியன்று இந்தியா சென்றதைத் தொடர்ந்து கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமியும், இந்து கலாசார இராஜாங்க அமைச்சர் பி.பி தேவராஜும் இந்தியா சென்றிருக்கின்றனர்.

இவர்கள் மூவரும் தனிப்பட்ட சொந்த அலுவல்கள் காரணமாகவே இந்தியா சென்றிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சேதமடைந்த ஆஸ்பத்திரி ஐ. நா. அதிகாரி பார்வை

(கிளிநொச்சி)

சுப்பர்சொனிக் விமானக் குண்டுவீச்சினால் சேதமுற்ற கிளிநொச்சி பிரதான வைத்தியசாலையை ஐ. நா. அதிகாரியொருவர் நேரில்சென்று பார்வையிட்டார். ஐ. நா. அபிவிருத்தித் திட்ட ஆலோசகர் அகுக் என்பவரே உத்தியோகபூர்வ விஜயமாக கடந்த வியாழன் கிளிநொச்சி வந்துசேர்ந்தார்.

இவர் சேதமுற்ற கிளிநொச்சி வைத்தியசாலைக் கட்டடங்களைப் பார்வையிட்டார். அத்துடன் அங்குகாணப்படும் குறைபாடுகள் வசதியீனங்கள் என்பவை பற்றியும் கேட்டறிந்தார்.

## எறும்புகளுக்கு கூட தலைமை உண்டு ஆனால் சிங்களவருக்கு இல்லை

### - சு. க. எம். பி. நெவில் பெர்னாண்டோ கவலை

(கொழும்பு)

அமைச்சர் தொண்டமான் தான் தொடர்ந்து அரசாங்கத்தில் அங்கம்வகிக்கவேண்டுமானால் காமினி திசநாயக்காவை அமைச்சராக்கவேண்டும் என்ற நிபந்தனையுடன் நாட்டுக்கு வெளியே சென்றுள்ளார்.

இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக்கட்சி எம். பி. நெவில் பெர்னாண்டோ பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும்போது, எறும்புகளுக்குக்கூட தலைமை இருக்கிறது. ஆனால் சிங்களவருக்கு தலைமை இல்லை.

ஒருபக்கத்திலிருந்துவிரட்டப்படுவோரை மறுபக்கத்தில் சேர்த்துக்கொள்ள முயற்சிகள் நடைபெறுகிறது. நான் எந்தப்பகுதியில் இருந்தாலும் நாட்டைக் காட்டிக்கொடுக்க மாட்டேன்.

தொண்டமான் அரசியலில் இருந்து விலகினால் அவரைச் சேர்த்துக் கொள்ளப்போவதாக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி அறிவித்துள்ளது. இப்படிக்காட்டிக் கொடுப்போர் எப்போதும் இருந்தே வந்துள்ளனர்.

மாயாதுன்னையைகாட்டிக் கொடுக்க போர்த்துக்கேயரின் உதவி நாடப்பட்டது. இவர்களை விரட்ட ஒல்லாந்தரின் ஒத்துழைப்புப் பெறப்பட்டது. அவர்களும் 150வருடம் இந்நாட்டை ஆண்டனர்.

ஒல்லாந்தரை வெளியேற்ற பிரிட்டிஷார் அழைக்கப்பட்டனர் அவர்களும் 150 வருடம் இத்தீவை ஆண்டனர்.

இப்போது ஐ.தே கட்சியை முடிக்க ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி தொண்டமானைச் சேர்த்துக்கொள்ளப் பார்க்கிறது. தொண்டமானும் தான் அரசில் தொடர்ந்து அங்கம் வகிக்க வேண்டுமானால் காமினி திசநாயக்காவை அமைச்சராக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வெளிநாடு சென்றுள்ளார்.

எமது இனத்தையும் நாட்டையும் பாதுகாக்க வேண்டும். நான் இனவாதியல்ல. எனக்கு இனமும் ஒன்று மதமும் ஒன்று. நான் சிங்களவன் என்று கூறிக்கொள்ள வெட்கப்படவில்லை. இங்கு ஒருலட்சத்து ஐம்பதாயிரம் வாக்குகளுக்காக நாட்டை விலை பேசுகிறார்கள். பாராளுமன்றத்தில் நான் இருந்தாலும் இல்லாவிட்டாலும் சொல்ல வேண்டியதைச் சொல்லியே தீருவேன்.

ஒரு சிறு பிரிவினர்க்காக நாட்டைவிற்றுவிட முடியாது. நான் தொண்டமானை மதிக்கிறேன். காரணம் அவர் தனது சொந்த இனத்திற்காகப் பேசுகிறார். ஆனால்எம்மைச் சேர்ந்தவர்களோ எம்மையும் நாட்டையும் காட்டிக் கொடுக்க முற்படுகிறார்கள் என்று குறிப்பிட்டார்.

## கடன் அடிப்படையில் மீன்பிடி வலை விநியோகம்

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளினால் தமது வதிவிடங்களை விட்டு இடம்பெயர்ந்த வறிய மீனவர்களின் குடும்பங்களுக்கு மீன்பிடி வலைகள் வழங்கப்படவுள்ளன.

சங்கானை, சங்கரத்தை துணைவி, அராலிஆகிய இடங்களில் இலங்கைச் செஞ்சிலுவை சங்கத்தினரால் குடியமர்த்தப்பட்ட இடம்பெயர்ந்தோர் முகாம்களில் வதியும் 156 வறிய மீனவர் குடும்பங்களுக்கு மீளளிப்பு கடன் வசதி அடிப்படையில் நாளை 8ஆம் திகதி புதன் கிழமை காலை 10 மணியளவில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க வலிமேற்கு சங்கானை பிரிவு மாவடி அலுவலகத்தில் மேற்படி சங்கத்தினரால் வழங்கப்படவுள்ளது. (41)

## எதிர்க்கட்சிகளின் ஆதரவிற்கே பேசினேன்

### - தொண்டமான்

(கொழும்பு)

நான் அங்கம் வகிக்கும் அரசாங்கத்துடன் எதிர்க்கட்சிகள் நெருக்கமாக இணைந்து செயல்பட உதவும் பொருட்டே எதிர்க்கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியதாக கிராமிய தொழிற்துறை மற்றும் சுற்றுலாத் துறைஅமைச்சர் எஸ். தொண்டமான் கூறியுள்ளார்.

கொழும்பில் அவர் செய்தியாளர் ஒருவரிடம் பேசுகையில் மேலும் கூறியதாவது, தேசியப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான வழிவகைகள் காணவும், அரசாங்கத்துக்கும் சுதந்திரக் கட்சிக்குமிடையிலான உறவுகளை விருத்தி செய்யவுமே முயலுகின்றேன் எனவும் தெரிவித்தார்.

இ.தொ.காவிற்கும் ஐ. தே.கவுக்கும் இடையிலான உறவில் பாதிப்புகள் இருப்பதை ஒப்புக் கொண்ட தொண்டமான் பாதிப்புற்ற உறவுகளுக்கு பரிகாரம் காண்பதில் பெரும் முன்னேற்றம் காணப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

## உடுபுடைவை அன்பளிப்பு

(பருத்தித்துறை)

தமிழீழ விடுதலைப் புலிகள் மாவீரர்கள் ஞாபகார்த்தமாக புலோலி வணிகர் சங்கம் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை மனநோயாளர் சிகிச்சைப்பிரிவில் சிகிச்சைபெறும் மனநோயாளர்களுக்குஉடுபுடைவைகளை அன்பளிப்புச் செய்தது (25)

## தனது குடும்பத்திற்கு மட்டுமே கருணாநிதி தலைவராகியுள்ளார்

## தி. மு. கவின் தலைவராக தொடர்ந்தும் நீடிப்பேன்

### - பு. கருணாநிதி நம்பிக்கை

(சென்னை)

யாழ். அரச அதிபர் குண்டுவீச்சை நிறுத்துமாறு கோரியது ஒரு சாதாரண அதிகாரியையோ அன்றி இராணுவ தளபதியையோ அல்ல. சிறிலங்கா ஜனாதிபதிக்கு அடுத்ததாக அதிகாரம் கொண்டவரான பிரதம மந்திரியிடம். ஆனால், அரச அதிபரின் கோரிக்கையை பிரதமர் ரணில் கேட்டுக் கொண்ட போதும் யாழ்ப்பாணத்தில் குடிச்செறிவு அதிகமுள்ள குருநகர்-பாஷையூர் பகுதியில் குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்நிலையானது பிரதமர் ரணில் அரச அதிபரின் கோரிக்கைகளை செவிமடுத்தாரா என்ற சந்தேகத்தையே தோற்றுவித்துள்ளது. மேலும் உத்தியோகப் பற்றற்ற பாதுகாப்பு இராஜாங்க அமைச்சராக ரணில் செயற்படுகையில் இத்தாக்குதல்கள் அவரை மீறி நடந்திருக்கவும் முடியாது.

இதேபோன்றே சிறிலங்கா ஜனாதிபதியும் நடந்து கொண்டுள்ளார். ஆனால் பிரதமர் ரணில் கேட்டதை மறந்தாரென்றால், ஜனாதிபதி பார்த்ததை மறந்தார் என்றே கூறவேண்டும். யாகப்பர் ஆலயம் மீதான குண்டு வீச்சைக் கண்டித்து மக்கள் நடத்திய பேரணியும், ஜனாதிபதிக்கு அனுப்பிய மகஜரும் அவருக்குக் கிடைக்கப் பெற்ற சில மணி நேரத்திற்குள்ளேயே குடாநாட்டின் மீது மிலேச்சத்தனமான தாக்குதல் நடத்தப்பட்டது இது ஜனாதிபதி டி. பி, விஜேதுங்க மகஜரை ஒரு மூலையில் வீசி எறிந்து விட்டார் என்பதையே காட்டுகின்றது.

அதாவது ரணிலுடன் பேசியதும், ஜனாதிபதிக்கு விளக்கியதும் செவிடன் காதில் ஊதிய சங்காகியது என்றே கொள்ளலாம். அதேவேளை, குடியிருப்புக்கள் மீது தொடர்ச்சியான தாக்குதல் என்பது அரசாங்கத்தின் முக்கியமான முடிவுகளில் ஒன்றாக மாறியுள்ளதையும் உணரமுடிகின்றது இதற்குக் காரணம் வான்படையே பெரும்இழப்பின்றித் தமிழரைக் கொன்றொழிக்கும்சாதகமான நிலையில் உள்ளதெனக் கருதப்படுவதினால் இருக்கலாம்.

நிலைமை இவ்வாறு இருக்க சிறிலங்கா அரசாங்கம் எவ்வாறு தமிழ் மக்களையும் தமிழ் பிரதேசத்தையும் தனது ஆட்சியில் உள்ள பகுதி எனக் கூறிக்கொள்ள முடியும்? அதாவது மக்களின் கோரிக்கைகளைப் புறக்கணிக்கும் அரசாங்கத்திற்கு அப்பகுதியின் ஆட்சி உரிமை மட்டும் எவ்வாறு கிடைக்கும்? அதேபோன்று தனது அரச அதிகாரிகளின் ஆலோசனைகளைப் புறக்கணிக்கும் அரசாங்கம் எவ்வாறு அப்பகுதியை நிர்வகிக்க முடியும்?

இதேவேளை, சிறிலங்கா அரசாங்கத்தின் இப் போக்கானது பேரினவாதத்தின் தன்மையைச் சரியாக விளங்கிக் கொண்டுள்ள அரச அதிகாரிகளுக்கும் தமிழ் மக்களுக்கும், அமைப்புகளுக்கும், ஆச்சரியமோ, அதிர்ச்சியோ அளிக்கும் விடயமோ, அன்றி ஏமாற்றத்தைக் கொடுக்கும் ஒன்றாகவோ இருக்கப் போவதில்லை, மாறாக சிறிலங்கா அரசில் தம்மையும் ஓர் அங்கமாகவும் சிறிலங்கா பரிபாலனம் தம்மால் நடைபெறுவதாகவும் கற்பனை செய்து கொண்டு வடக்கிலும்-கிழக்கிலும் அதற்கு அப்பாலும் செயற்படும் அரச அதிகாரிகளுக்கு நல்லதொரு படிப்பினையாகும்.

இப்படிப்பினையானது போதிப்பது என்னவென்றால் வடக்கு-கிழக்கில் செயற்படும் தமிழ் அதிகாரிகள் சிங்கள அரசின் ஆட்சிஅதிகாரத்தை நிலை நிறுத்துவதற்கான கருவியாகப் பயன்படுத் தப்படுகின்றனரே ஒழிய சிறிலங்கா அரசின்ஓர் அங்கமாக அவர்கள் கருதப்படவில்லை என்பதையே ஆகும். இதனை இனியாவது சிறிலங்கா அரசில் விசுவாசம் கொண்டு செயற்படும் அரச அதிகாரிகள் அனைவரும் புரிந்து கொண்டு செயற்படுவது நல்லது. இதனையும் புறக்கணித்து சிறிலங்கா அரசில் பதவி உயர்வு பெற்றுவிடலாம், அதிகாரத்தை கைப்பற்றி விடலாம் என யாராவது செயற்படுவார்களேயானால் அவர்கள் தம் இனத்திற்கு மட்டுமல்ல, தமக்கு எதிராகவுமே செயற்படுபவர்களாக இருப்பார்கள்.

தொழில் இராஜாங்க அமை ... பட்டுள்ளது.

## சேதமடைந்த ஆஸ்பத்திரி ஐ. நா. அதிகாரி பார்வை

(கிளிநொச்சி)

சுப்பர்சொனிக் விமானக் குண்டுவீச்சினால் சேதமுற்ற கிளிநொச்சி பிரதான வைத்தியசாலையை ஐ. நா. அதிகாரியொருவர் நேரில்சென்று பார்வையிட்டார். ஐ. நா. அபிவிருத்தித் திட்ட ஆலோசகர் அகுக் என்பவரே உத்தியோகபூர்வ விஜயமாக கடந்த வியாழன் கிளிநொச்சி வந்துசேர்ந்தார்.

இவர் சேதமுற்ற கிளிநொச்சி வைத்தியசாலைக் கட்டடங்களைப் பார்வையிட்டார். அத்துடன் அங்குகாணப்படும் குறைபாடுகள் வசதியீனங்கள் என்பவை பற்றியும் கேட்டறிந்தார்.

னர் அவர்களும் 150 வருடம்

## உடுபுடைவை அன்பளிப்பு

(பருத்தித்துறை)

தமிழீழ விடுதலைப் புலிகள் மாவீரர்கள் ஞாபகார்த்தமாக புலோலி வணிகர் சங்கம் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை மனநோயாளர் சிகிச்சைப்பிரிவில் சிகிச்சைபெறும் மனநோயாளர்களுக்குஉடுபுடைவைகளை அன்பளிப்புச் செய்தது (25)

(கொழும்பு)

நான் அங்கம் வகிக்கும் அரசாங்கத்துடன் எதிர்க்கட்சிகள் நெருக்கமாக இணைந்து செயல்பட உதவும் பொருட்டே எதிர்க்கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியதாக கிராமிய தொழிற்துறை மற்றும் சுற்றுலாத் துறைஅமைச்சர் எஸ். தொண்டமான் கூறியுள்ளார்.

கொழும்பில் அவர் செய்தியாளர் ஒருவரிடம் பேசுகையில் மேலும் கூறியதாவது, தேசியப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான வழிவகைகள் காணவும், அரசாங்கத்துக்கும் சுதந்திரக் கட்சிக்குமிடையிலான உறவுகளை விருத்தி செய்யவுமே முயலுகின்றேன் எனவும் தெரிவித்தார்

இ. தொ. காவிற்கும் ஐ. தே. கவுக்கும் இடையிலான உறவில் பாதிப்புகள் இருப்பதை ஒப்புக் கொண்ட தொண்டமான் பாதிப்புற்ற உறவுகளுக்கு பரிகாரம் காண்பதில் பெரும் முன்னேற்றம் காணப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

\- தொண்டமான்

## தனது குடும்பத்திற்கு மட்டுமே கருணாநிதி தலைவராகியுள்ளார்

\- எல். கணேசன்

(சென்னை)

எங்கள் லட்சியத்துக்காக போராடுகிறார் என்பதால் தான் மு. கருணாநிதியை கட்சியின் தலைவராகவும் திராவிட இயக்கத்தின் தலைவராகவும், தமிழினத்தின் தலைவராகவும் உயர்த்தி வைத்தோம். ஆனால்அவரோ அவருடைய குடும்பத்திற்கு மட்டுமேதலைவர் என்ற அளவுக்கு தாழ்ந்து விட்டார்.

இவ்வாறு தஞ்சாவூரில் நிருபர்களிடம் பேசிய தி. மு. க. வின் முக்கிய பிரமுகரான எல். கணேசன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், ஒரு காலத்தில் கட்சிக்காக தன்னுடைய குடும்பத்தையே தியாகம் செய்யும் அளவுக்கு கருணாநிதி இருந்தார். இன்றோ தனது குடும்பத்திற்காக கட்சியையே தியாகம் செய்யும் அளவுக்கு அவர் சென்றுவிட்டார்.

இளைஞர்களின் தளபதியாக உருவாகியிருக்கும் வை. கோபாலசாமி வரலாறு படைப்பார். அவரைப் பின்பற்றும் இளைஞர்கள் ஒரு விஷயத்தை மறந்துவிடக்கூடாது.

கருணாநிதியை இழிவுபடுத்துவதோ, கேவலப்படுத்துவதோ நம்முடைய எண்ணம் அல்ல. கட்சியை அழிவிலிருந்து காப்பதுதான் நம்முடையஇலட்சியம் அதற்கான பணியில் மட்டுமே நம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.

## தி. மு. க விலுள்ள பிளவு வன்முறையாகி வருகிறது

(சென்னை)

தி. மு. க வில் ஏற்பட்ட பிளவு தற்போது வன்முறைச் சம்பவங்களாகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. கருணாநிதியும் கோபாலசாமியும் பல்வேறு மாவட்டங்களுக்கும் சென்று தமது ஆதரவைக் கணித்து வருகின்றனர்.

வை. கோபாலசாமியின் கோட்டையான மதுரைக்கு 9ஆம் திகதி கருணாநிதி செல்லவுள்ளார். கருணாநிதியின் கோட்டையான வேலூருக்கு கோபாலசாமி ஏற்கனவே சென்று விட்டார். அங்கு ஏற்பட்ட கலவரத்தில் பொலிஸ் தடியடி நிகழ்ந்துள்ளது.

கோபாலசாமியின் பின்னாலிருந்து விடுதலைப் புலிகள் ஆதரவு அளிப்பதாகத் தி. மு. க. ஏடான முரசொலி கூறி வருகிறது. புலிகள் ஆதரவுண்டு என்பதற்குச் சான்றாக வெளிநாடுகளிலிருந்து புலிகளுக்கு ஆதரவான ஏடுகளில் இருந்து பிரசுரமாகும் கட்டுரைகளை கருணாநிதி முரசொலியில் வெளியிடுகிறார்.

கோபாலசாமியோ இலங்கைத் தமிழர் பிரச்சினையில் கருணாநிதி முன்னுக்குப் பின் முரணாக இரு நோக்குடன் பேசி வருவதாகக் குற்றஞ் சாட்டியுள்ளார்.

## தொண்டர்கள் வரவில்லை கருணாநிதி மகிழ்ச்சி

(சென்னை)

மதுரையில் தன்னை வரவேற்க வழக்கமான கூட்டம் வராதது குறித்து கருணாநிதி மகிழ்ச்சி தெரிவித்தார். முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினரான அக்கினிராஜ்சின் மணிவிழா மதுரை லட்சுமி சுந்தரம் மண்டபத்தில் நடைபெற்றபோது அதில் கலந்து கொண்டு உரையாற்றிய மு. கருணாநிதி மேலும் கூறுகையில், வழக்கமாக வரும் தொண்டர் கூட்டம் வந்திருந்தால் என்ன ஆகி இருக்கும் என்பதையும் உணர்ச்சி பூர்வமாக விபரித்தார். பாண்டியன் ஓட்டல் உடைந்திருக்கும் ரயில்வே ஸ்டேசன் அலங்கோலமாகி இருக்கும். எனது காருக்கு சேதம் ஏற்பட்டு இருக்கும். திண்டுக்கல் மாவட்ட செயலாளர் பெரியசாமியின் வேட்டி அவிழ்க்கப்பட்டு இருக்கும் காவேரி மணியத்தின் சட்டை கிழிக்கப்பட்டு இருக்கும் என்றும் தெரிவித்தார்.

அத்துடன் இன்றைக்கு ஏற்பட்ட பூசல் தனிப்பட்ட கருணாநிதிக்கு எதிராக ஏற்பட்ட பூசல் அல்ல. தமிழர்களுக்கு எதிராக தமிழ் மண்ணுக்கு எதிராக நடத்தப்படும் செயல்கள் எனவும் குறிப்பிட்டார்.

## தி. மு. கவின் தலைவராக தொடர்ந்தும் நீடிப்பேன்

மு. கருணாநிதி நம்பிக்கை

(சென்னை)

தி. மு. கவின் தலைவராக நான் பொறுப்பேற்று இருபத்து நான்கு ஆண்டுகள் நிறைவு பெற்று விட்டன. அடுத்த ஆண்டில் வெள்ளி விழாக் காணும்வரை நான் தலைவராக இருப்பேன்என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது என்று தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி தெரிவித்தார்.

'இந்து' நிறுவன ஊழியர் சங்கத்தின் தலைவராக என். வி. என். சோமு பொறுப்பேற்று 25 ஆண்டுகள் நிறைவு பெற்றதை முன்னிட்டு, சென்னை ஏ. வி. எம். ராஜேஸ்வரி திருமண மண்டபத்தில்நடைபெற்ற பாராட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய மு. கருணாநிதி மேலும் கூறுகையில், தந்தை என். பி. நடராசனை போல மகன் என். வி. என். சோமுவும் எந்தவித சலனத்திற்கும் ஆளாகாமல் நெஞ்சுறுதியுடன் கொண்ட கொள்கையில் உறுதியாக உள்ளார்.

தந்தையை நான் அமைச்சராக்கினேன். பிள்ளையை பாராளுமன்றத்துக்கு அனுப்பினேன் என்றும் தெரிவித்தார்.

## இந்திய பாகிஸ்தானிய வெளியுறவு அமைச்சர்கள் டாக்காவில் சந்தித்து பேச்சு

(டாக்கா)

இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர்தினேஷ்சிங் கடந்த சனியன்றிடாக்காவில்பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் ஆசிப் அகமது அலியைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். இந்த இரு வெளியுறவு அமைச்சர்களுக்கு மிடையிலான முதலாவது சந்திப்பு இது என்பது குறிப்பிடத்தக்கது.

தெற்காசிய பிராந்திய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களுக்கான சந்திப்பு டாக்காவில் நடைபெற்றது தெரிந்ததே. அதில் கலந்து கொண்ட இந்திய பாகிஸ்தானிய வெளியுறவு அமைச்சர்கள் பேச்சுவார்த்தைகளை நடத்தினர் இச் சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய இந்திய வெளியுறவு அமைச்சர் தினேஷ்சிங், இச் சந்திப்பு மகிழ்ச்சிகரமானதாக இருந்ததாகத் தெரிவித்தார் இரு நாட்டுப் பிரதமர்களும் சந்திப்பதற்கான வாய்ப்பு குறித்து வினவப்பட்டபோது அடுத்தமாத தொடக்கத்தில் இஸ்லாமாபாத்தில் வெளியுறவு செயலர்களுக்கிடையிலான சந்திப்பின்போது இதுபற்றி ஆராயப்படும் எனவும் தெரிவித்தார்.

## மத்திய பிரதேச முதல்வராக திக்விஜய்சிங் தெரிவானார்

(புதுடில்லி)

மத்திய பிரதேச மாநிலத்தில் காங்கிரஸ் கட்சியின் சட்டப் பேரவைத் தலைவராக திக்விஜய்சிங் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் 24-வது முதலமைச்சராக பதவியேற்கவுள்ளார்.

இதேவேளை மிசோராம் மாநிலத்திலும் புதிய அமைச்சரவை அமைப்பதில் காங்கிரஸ் கட்சி தீவிரமாகியுள்ளது. நாற்பது உறுப்பினர்களைக் கொண்ட மிசோராம் சட்டப்பேரவையில்காங்கிரஸ் 16 இடங்களைக் கைப்பற்றியிருப்பது தெரிந்ததே.

## சூறாவளியினால்இறந்தோர் 61 பேராக உயர்வு

(சென்னை)

தமிழ்நாட்டில் சூறாவளியினால் இறந்தவர்களின் எண்ணிக்கை 61ஆகஅதிகரித்துள்ளது. சூறாவளியினால் பாதிப்படைந்த பகுதிகளை இன்று முதலமைச்சர் ஜெயலலிதா விமானத்திலிருந்துபார்வையிடவுள்ளார். மீட்புப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

# விடுப்பில் செல்லும்விரிவுரையாளர்கள் மீண்டும் கடமைக்கு திரும்புவதில்லை

## -- பேராசிரியர் பாலச்சந்திரன்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஆசிரியர்கள் சிலர் ஏழாண்டுக்கு ஒருமுறை வரும் ஒரு வருட விடுப்பில் வெளிநாடுகளுக்குச் சென்றால் நாடு திரும்புவதில்லை. அங்கேயே தங்கிவிடுகிறார்கள் இன்னும் சிலர்கொழும்புசென்றால்மீளவும்கடமைக்கு வருவதில்லை. இந்த வகையில் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடம் பெரிதும் பாதிப்படைந்துள்ளது. இங்கு விரிவுரையாளர்களுக்கும் மற்றும் பேராசிரியர்களுக்கும் பெரும் பற்றாக்குறை நிலவுகிறது. இதே நிலைதான் விஞ்ஞான பீடத்திலும் கலைப்பீடத்திலும் விரிவுரையாளர்கள் பற்றாக் குறையாகவே இருக்கிறார்கள். கலைப்பீடத்திலிருந்து வெளியே போன ஏழு ஆசிரியர்கள் இன்றுவரை கடமைக்குச் சமுகம் தரவில்லை.

இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக் கழக புவியியல் துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். பாலச்சந்திரன் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக் கழக புறநிலைப் படிப்புகள் அலகு நடத்திய கிராம அலுவலர் பயிற்சி நெறி நிறைவுநாள் விழாவில் தலைமை உரை ஆற்றும்போதே அவர் மேற்கண்டவாறுகூறினார். விழா பல்கலைக்கழக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெற்றது.

அவர் மேலும் பேசும்போது தமிழ்நாட்டில் புயல் அபாயம் பற்றித் தெரிந்ததும் தமிழ்நாட்டு அரசு தீவிரத்துடன் செயற்படுகிறது. வட பகுதியில் புயல் வீசும் என்று வானிலை அபாய அறிவிப்பு வெளிவந்தது. ஆனால் சிறிலங்கா அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையுடன்நடந்துகொள்கிறது. அதனால் அடிமட்ட அளவில் கிராம அலுவலர்களே வெள்ளப் பெருக்கு, புயல் அபாயம் சம்பந்தமான வேலைகளைக் கவனிக்க வேண்டியுள்ளது எனக் கூறினார்

புறநிலைப்படிப்புகள் அலகு இணைப்பாளர் இரா. சிவச்சந்திரன் பேசும்போது. யாழ் பல்கலைக்கழகப் புறநிலைப் படிப்புகள் அலகில் இரண்டு விரிவுரைத் தொடர்களிலும், ஆறுகற்கை நெறிகளிலும்இதுவரை 3,500 பேர் பயிற்சி பெற்று வெளியேறியுள்ளார்கள் என்றார். (பா)

# பாஜ்கள் சேதமடைந்ததால் பொருள் இறக்கல் தாமதம்

(நமது நிருபர்)

பருத்தித்துறையில் பொருள்கள் இறக்கும் வேலைக்கு பயன்படுத்தப்பட்டு வந்த நான்கு பாஜ்களும் பழுதடைந்ததனால் கப்பல்களிலிருந்து பொருள்கள் இறக்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன

அண்மையில் வீசிய கடும் காற்றினால் ஒரு பாஜ் அமிழ்ந்து விட்டதாகவும் மற்றைய மூன்றும் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது. நேற்றைய தினம் சேதமடைந்தவற்றில் ஒரு பாஜ் திருத்தப்பட்டு அதன் மூலம் பொருள்கள் இறக்கப் படுவதாகவும் மற்றைய இரு பாஜ்களும் திருத்தும் பணி தொடர்ந்து நடைபெறுவதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

யாழ். போதனா வைத்திய சாலைக்கான ஒரு தொகுதி மருந்துப் பொருள்கள், உருளைக்கிழங்கு ஆகியவற்றுடன் றுகுணு கப்பல் பருத்தித்துறையில் தரித்து நிற்கிறது நேற்றுமுதல் இப் பொருள்கள் இறக்கும் பணி ஆரம்பமாகியுள்ள போதிலும் பாஜ்கள் பழுதடைந்திருப்பதால் திருத்தப்பட்ட ஒன்றின் மூலமே பொருள்கள் இறக்கப் படுகின்றன. (ச, சி)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**06- 12 -93**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 11617

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

42-3329, 22-3641, 41-7297, 26-6073, 43-6007, 42-7312, 41-9659, 42-6452, 42-5080, 26-7949, 26-6029, 26-4139, 24-4481, 26-1461, 40-6979, 27-6415, 27-5187, 27-6821.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-1376, 28-3890, 24-9676, 43-2524, 41-9989, 42-1750, 42-3927.


## பெண் எழுதுவினைஞர் தேவை

பால்:- பெண்

வயது:- 35 வயதுக்குட்பட்டவர்

தகைமை:-கல்விப் பொதுத் தராதர (சாதாரண) பரீட்சையில் சித்தியெய்தியவர்

வேறுதகைமை:- தட்டச்சில் பயிற்சி உள்ளவர்கள், பொது ஸ்தாபனங்களில் தொழில் செய்த அனுபவமுள்ளவர்கள்


## ஆண்டு 5 தேர்வுப் புள்ளிகள்

நல்லூர் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளின் ஆண்டு 5 பொதுத் தேர்வுக்கான புள்ளிகள் எதிர்வரும் 12-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை10-00மணிக்கு கோட்டக்கல்வி அலுவலகத்தில் வைத்து விநியோகிக்கப் படும் அதிபர்கள் இப்புள்ளிகளை விடைத் தாள்களுடன் ஒப்புநோக்கித் தமது புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் வண்ணம் கோட்டப்பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி.புலேந்திரன் கேட்டுக் கொள்கின்றார்.

# தீர்வு குறித்த திட்டத்தினை எவரும் தெளிவாகக் கூறுவதில்லை

## சு. க. எம். பி குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டில் வடக்கு கிழக்குப் பிரச்சினை தொடர்பாக மட்டுமே பேசப்படுகின்றது தவிர எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாக இதற்கான தீர்வுபோன்ற விடயங்கள் தொடர்பாக தெளிவான ஒன்றும் பேசப்படுவதாக தெரியவில்லை என பொலனறுவை மாவட்ட பாராளுமன்ற சுதந்திரக்கட்சி உறுப்பினர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற கூட்டத் தொடர் குழுநிலை விவாதத்தின்போது மேற்படி கருத்தை தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் வடக்கு கிழக்குப் பகுதியில் மட்டுமன்றி கொழும்பு நகரத்திலே இன்று பாதுகாப்பு இல்லை மக்கள் பயப்பீதியிலே வாழ்கின்றார்கள். இதனால் நாட்டின் வடமத்திய மாகாணத்தின் பாதுகாப்பு வெகுவாகப் பாதிப்புஅடைந்துள்ளது இதேநிலை தொடர்ந்து செல்லுமாயின் 2000வருடத்தில் நாட்டில் துப்பாக்கியும் ரவைகளும், குண்டுகளும் மட்டுமே மிஞ்சிக் காணப் படும். எனவே மிகவும் அவதானமாக அரசாங்கம்செயற் படவேண்டும்.

இராணுவத்தை விட்டு தப்பியோடிய படையினர் 1500பேர் தலைமறைவாக வாழ்கின்றார்கள், இவர்கள் இளைஞர்கள். எதிர் காலத்தில் இவர்கள் நாட்டிற்கு எவ்வளவு அச்சுறுத்தலாக அமைவர் என்பதில் அரசாங்கம் அக்கறைகொண்டதாகத் தெரியவில்லை. எதிர்கால சமூகத்திற்கு எவ்வளவு சமூக பிரச்சினையை இவர்கள் ஏற்படுத்தப்போகின்றார்கள் என்பதை கருத்தில் கொள்ளுமாறு வேண்டுகோள விடுத்தார்

# பல்கலை. விண்ணப்பங்கள் கொழும்பு அனுப்பப்பட்டன

1993-94 கல்வியாண்டு பல்கலைக்கழக அனுமதிக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் கோரப்பட்ட முதலாவது அனுமதி விண்ணப்பப்படிவங்கள் யாவும் கோமாரி கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பதிவாளர் நேற்றுத் தெரிவித்தார்.

1992 க பொ. த. உயர்தர பரீட்சைக்கு தோற்றி 180 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்களிடமிருந்து பெற்ற விண்ணப்பப்படிவங்கள் மொத்தமாக 1598 அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் இவ் வாண்டுக்கான அனுமதி படிவங்களை யாழ் பல்கலைக் கழகம் ஏற்றுக்கொள்ளும் திகதி முடிவுற்றுள்ளது எனவும் தெரிவித்தார்

மேலும் அனுமதி படிவங்கள் அனுப்ப விரும்புகிறவர்கள் நேரடியாக பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவிற்கு அனுப்புமாறு கேட்டுள்ளார். (05)

## மீன்பிடிகுழு கூட்டம்

(நமது நிருபர்)

யாழ். மாவட்ட மீன்பிடி குழு கூட்டம் நாளை மறுதினம் வியாழன் காலை 10 மணிக்கு செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சீ-நோர், வடமாகாண மீனபிடி ஒன்றியம், அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் ஆகியவற்றின் அதிகாரிகளையும் மாவட்ட கடற்தொழில் அலுவலர் கூட்டுறவு உதவி ஆணையாளர் மற்றும் உதவி அரசாங்க அதிபர்களையும் கலந்து கொள்ளுமாறு மேலதிக அரசாங்க அதிபர் கேட்டுள்ளார்,

## மாணவர் உணவு முத்திரை

காரைநகர் ப.நோ கூ. சங்கத்தால் 1993 சித்திரைமாத, 1993 ஆடிமாத மதிய உணவு முத்திரைகளுக்குரிய பொருள்கள் வழக்கம்பரையில் உளள சங்கக் கிளையில் வழங்கப் பட்டு வருகின்றன.

### மலையக தோட்டங்களில்

# தொழிற்சங்க போராட்டங்கள் அடுத்தமாதம் நடாத்த முடிவு

(கொழும்பு)

அடுத்த மாதம் தோட்டங்கள் முழுவதிலும் வேலை நிறுத்தங்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் இதில் மலையக தோட்ட தொழிலாளர் சம்மேளனங்கள் 15 தயாராகி வருவதாகவும் தோட்ட தொழிலாளர் சங்கங்களின் கூட்டு சமாஜத்தின் பேச்சாளர் எஸ். நடேசன் தெரிவித்துள்ளார்.

தோட்ட தொழிலாளர் எதிர் கொள்ளும் பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வு காணப்படும் என்பதில் எந்த நம்பிக்கையும் இல்லை என்றும் தோட்ட தொழிலாளர் தமது நியாயமான 8 கோரிக்கைகளை முன் வைத்துள்ளதாகவும் இதுவரை தீர்வு கிடைக்கக்கூடிய சாத்தியக்கூறு தென்படவில்லைஎனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கருத்தரங்கு

யாழ், பல்கலைக்கழக புவியியற் கழகத்தின் ஏற்பாட்டில் பாலஸ்தீன இஸ்ரேல் பிரச்சினையின் இன்றைய நிலை என்ற பொருளில் கருத்தரங்கு நாளை பிற்பகல் மூன்று மணியளவில் புவியியற்துறை மண்டபத்தில் நடத்தப்படவுள்ளது இக் கருத்தரங்கில் கலைப் பீடாதிபதி பேராசிரியர் பொ, பாலசுந்தரம் பிள்ளை சிறப்புரையாற்றவுள்ளார்.

# இந்தியாவில் 5 ரயில்களில் மர்மகுண்டு வெடிப்புகள்

(சென்னை)

இந்தியாவில் பல்வேறு இடங்களில் ரயில்களில் குண்டு வெடித்தமையை அடுத்து பயணிகளுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருப்பதாக ரயில்வே அமைச்சர் திரு. யாக்பர்சரீப் நேற்று நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

அவர் மேலும் இதுபற்றித் தெரிவிக்கையில், கடந்த 24 மணி நேரத்துக்குள் சுமார் ஐந்து பயணிகள் ரயில்களில் குண்டுகள வெடித்திருப்பதாக தெரிவித்தார்.

ரயில்களில் சோதனை நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துமாறும் குண்டுகள் தொடர்பான சோதனைப்படைகளை வலுப்படுத்துமாறும் ரயில்வே அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; நேற்றைய குண்டு வெடிப்புக்களில் ஒருவர்கொல்லப்பட்டார் மற்றும் 15பேர் காயமடைந்துள்ளனர்.

# சிறிலங்காவின்எதிர்காலம்அழிவுறுமா?

## ஆண்டு 10 பரீட்சையில் வினா

# விளையாட்டுப் போட்டிகள்

42-7312, 41-9659, 42-6452, 42-5080, 26-7949, 26-6029, 26-4139, 24-4481, 26-1461, 40-6979, 27-6415, 27-5187, 27-6821.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-1376, 28-3890, 24-9676, 43-2524, 41-9989, 42-1750, 42-3927.


## பெண் எழுதுவினைஞர் தேவை

பால்:- பெண்

வயது:- 35 வயதுக்குட்பட்டவர்

தகைமை:-கல்விப் பொதுத் தராதர (சாதாரண) பரீட்சையில் சித்தியெய்தியவர்

வேறுதகைமை:- தட்டச்சில் பயிற்சி உள்ளவர்கள், பொது ஸ்தாபனங்களில் தொழில் செய்த அநுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

15 - 12 - 93 க்கு முன் நேரில் விண்ணப்பிக்கவும்

"கலை ஊடக இணையம்"
117, மானிப்பாய் வீதி,
ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்

(6796)

## கலை ஊடக இணையம்

யாழ். மாவட்டத்திலுள்ள வீடியோ படப்பிடிப்பாளர்கள், வீடியோ நாடா விநியோகஸ்தர்கள், ஓடியோ நாடா ஒலிப்பதிவாளர்கள், விநியோகஸ்தர்கள் ஒருங்கிணைக்கப்பட்டு ''கலை ஊடக இணையம்'' எனும் நலன்பேணும் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இத் துறை சார்ந்தோரை 31-12-93க்கு முன்னர் கலை ஊடக இணையத்தில் அங்கத்தவராக பதிவுசெய்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

செயலாளர்
கலை ஊடக இணையம்,
117, மானிப்பாய் வீதி,
ஐந்துசந்தி, யாழ்ப்பாணம்.

(6794)

## சகல வீடியோ நாடா விநியோகஸ்தர்களுக்கும்

யாழ். மாவட்டத்திலுள்ள சகல வீடியோ நாடா விநியோகஸ்தர்களும் 1 - 12 - 93 முதல் புதிய சினிமாப் படங்களை ''கலை ஊடக இணையத்தின்'' ஊடாக தணிக்கை சபையால் பரிசீலனை செய்யப்பட்ட பின்னரே அவ் வீடியோ திரைப்படத்தை பதிவு செய்யவோ, விநியோகிக்கவோ முடியும் என்பதை அறியத் தருகின்றோம்.

"கலை ஊடக இணையம்"
117, மானிப்பாய் வீதி
ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.

(6795)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 81 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 7 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது


தொடர்ந்து நடைபெறுவதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

யாழ். போதனா வைத்தியசாலைக்கான ஒரு தொகுதி மருந்துப் பொருள்கள், உருளைக்கிழங்கு ஆகியவற்றுடன் றுகுணு கப்பல் பருத்தித்துறையில் தரித்து நிற்கிறது நேற்றுமுதல் இப் பொருள்கள் இறக்கும் பணி ஆரம்பமாகியுள்ள போதிலும் பாஜ்கள் பழுதடைந்திருப்பதால் திருத்தப்பட்ட ஒன்றின் மூலமே பொருள்கள் இறக்கப்படுகின்றன. (ச, சி)

கள் முழுவதிலும் வேலை நிறுத்தங்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் இதில் மலையக தோட்ட தொழிலாளர் சம்மேளனங்கள் 15 தயாராகி வருவதாகவும் தோட்ட தொழிலாளர் சங்கங்களின் கூட்டு சமாஜத்தின் பேச்சாளர் எஸ். நடேசன் தெரிவித்துள்ளார்.

தோட்ட தொழிலாளர் எதிர் கொள்ளும் பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வு காணப்படும் என்பதில் எந்த நம்பிக்கையும் இல்லை என்றும் தோட்ட தொழிலாளர் தாகவும் இதுவரை தீர்வு

### கருத்தரங்கு

யாழ், பல்கலைக்கழக புவியியற் கழகத்தின் ஏற்பாட்டில் பாலஸ்தீன இஸ்ரேல் பிரச்சினையின் இன்றைய நிலை என்ற பொருளில் கருத்தரங்கு நாளை பிற்பகல் மூன்று மணியளவில் புவியியற்துறை மண்டபத்தில் நடத்தப்படவுள்ளது இக் கருத்தரங்கில் கலைப் பீடாதிபதி பேராசிரியர் பொ, பாலசுந்தரம் பிள்ளை சிறப்புரையாற்றவுள்ளார்.

# இந்தியாவில் 5 ரயில்களில் மர்மகுண்டு வெடிப்புகள்

(சென்னை)

இந்தியாவில் பல்வேறு இடங்களில் ரயில்களில் குண்டு வெடித்தமையை அடுத்து பயணிகளுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருப்பதாக ரயில்வே அமைச்சர் திரு. யாக்பர்சரீப் நேற்று நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

அவர் மேலும் இதுபற்றித் தெரிவிக்கையில், கடந்த 24 மணி நேரத்துக்குள் சுமார் ஐந்து பயணிகள் ரயில்களில் குண்டுகள வெடித்திருப்பதாக தெரிவித்தார்.

ரயில்களில் சோதனை நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துமாறும் குண்டுகள் தொடர்பான சோதனைப்படைகளை வலுப்படுத்துமாறும் ரயில்வே அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; நேற்றைய குண்டு வெடிப்புக்களில் ஒருவர் கொல்லப்பட்டார் மற்றும் 15பேர் காயமடைந்துள்ளனர்.

# சிறிலங்காவின்எதிர்காலம் அழிவுறுமா? ஆண்டு 10 பரீட்சையில் வினா

## கேள்வி தயாரித்தவர் கைது

(கொழும்பு)

பாடசாலை வகுப்பேற்றப் பரீட்சையில் அரசுக்கு ஆத்திரமூட்டும் வினாத்தாளைத் தயாரித்த ஆசிரியரும் ஆசிரிய ஆலோசகரும் அநுராதபுரப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்,

வட மத்திய மாகாணக் கல்வித் திணைக்கள வகுப்பேற்றப் பரீட்சை 1993 சிங்கள மொழியும் இலக்கியமும் என்ற ஆண்டு 10 வினாத்தாளிலேயே அரசுக்கு எதிரான வினா இடம்பெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. வினா ஒன்று 'பி' என்ற இலக்கத்தைக் கொண்ட வினா வருமாறு:

வடக்கு யுத்தத்தினால் எரிந்து கொண்டிருக்கிறது, தெற்கிலும் இரத்தம் சிந்தும் சம்பவங்கள் நிறைய நடைபெறுகின்றன. முழுநாடும் எதிர்காலத்தைப் பற்றிய ஒரு நிச்சயமற்ற தன்மைக்குத் தள்ளப்பட்டுள்ளது. பொறுப்பிலுள்ளவர்கள் எதைப் பற்றியும் விழிப்பாக இல்லை. நாடு முழுவதும் வெளிநாடுகளுக்கு அடகு வைக்கப்பட்டுள்ளது. நாடே துண்டு துண்டுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது பாரிய தொழில் நிறுவனங்கள் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்குக் கையளிக்கப்பட்டுள்ளதால் பொருளாதாரம் சீர்குலைந்துவிட்டது.

மேற்படி பந்தியை வாசித்து ''சிறிலங்காவின் எதிர்காலம் அழிவுறுமா?'' என்ற தலைப்பில் பாடசாலை சஞ்சிகைக்கு ஒரு கட்டுரை எழுதும்படி வினா அமைக்கப்பட்டுள்ளது.

அநுராதபுரத்தில் உள்ள பாடசாலை ஆசிரியர் தயாரித்த இந்த வினாவை, ஆசிரியர் ஆலோசகர் அனுமதித்த குற்றத்துக்காகவே அவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

# மடு அகதிமுகாம்களில் பெரும் உணவுபற்றாக்குறை

(கொழும்பு)

மன்னாரில் மடுப்பகுதியில் அமைந்துள்ள அகதி முகாம்களில் பெரும்உணவுப்பற்றாக்குறை தோன்றவுள்ளதாக கத்தோலிக்க கிறிஸ்தவ தலைவர்கள் தெரிவித்துள்ளனர் அகதிகளுக்கான ஐ. நா. உயர்ஸ்தானிகராலயம் உணவு விநியோகத்தை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர்கள் கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மடுமுகாம்களில் 32ஆயிரம் அகதிகள் உள்ளனர் என்றும் யூ, என். எச். சி. ஆர் அங்கு உடன் நடவடிக்கையை தொடங்காவிடின் பெரும் பிரச்சினைகளை மக்கள் எதிர் நோக்குவர் என்றும் கிறிஸ்தவ தலைவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்,

### பழிவாங்கும்

லப்பட்டு இன்னும்பலர் காயமடைந்ததாகவும் வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையில் அடிக்கடி பயணம் செய்யும் உள்ளூர் மக்கள் தெரிவித்தனர். இப்படி அடிக்கடி தெற்கு வரும் தமிழர்கள் முன்பு தந்த தகவல்கள் சரியாகவே இருந்திருக்கின்றன.

பாதுகாப்புப் படையினர் வடபகுதி மீது கடந்த நான்கு கிழமைகளா நடத்தி வரும் வான் வெளித் தாக்குதல்களில் ஐம்பதுக்கும் அதிகமான மக்கள உயிரிழந்துள்ளனர் ஒரு சம்பவத்தில் ஒரு கத்தோலிக்க தேவாலயம் மீது குண்டு போடப்பட்டு பதினைந்துக்கும் அதிகமான பொது மக்கள் கொல்லப்பட்டனர். மருத்துவ மனைகளும் அடிபட்டிருக்கின்றன. ஆனால் அண்மையில் இந்தக் குண்டுத் தாக்குதல்களால் ஏற்பட்ட பெரும் இழப்புகளும், சேதங்களும் - ஒரு தேவாலயம், இரு மருத்துவமனைகள், அரசுக் கட்டடம் ஆகியவை தாக்கப்பட்டதால் ஒன்றில் புலனாய்வு சரியாக இல்லை அல்லது பாதுகாப்புப் படையினர் அப்பாவி மக்களுக்கு துன்பம் இழைக்க ஒரு முறையான முயற்சியில் இறங்கியுள்ளனர் என்பதைக் கோடி காட்டுவதாகவே தாக்குதல்கள் அமைந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### விசேட

தப்படும் எனவும்கூறப்பட்டது

இவர்களின் இடத்திற்கு இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளில்விசேட இராணுவப் பயிற்சிகளை முடித்துக் கொண்ட சகல உயர் இராணுவ அதிகாரிகளையும்வடக்கு கிழக்கு முகாம்களுக்கு உடன் அனுப்புவது எனவும் முடிவு செய்யப்பட்டது.

### கிளிநொச்சியில்

பரீட்சை மாலை வரை பின் போடப்பட்டது. குண்டுவீச்சு விவசாய பீடத்திலிருந்து சுமார் 300 மீற்றருக்குள் நடைபெற்றது

க.பொ.த (சாதாரணம்) பரீட்சைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் அங்கு குண்டு வீசப்பட்டதால், பரீட்சை நிலையங்களிலிருந்து மாணவர் பாதுகாப்பைத் தேடி ஓடினர் இதனால் பரீட்சையும்பாதிப்படைந்தது

கிளிநொச்சி வைத்தியசாலையில் இருந்தவர்களும் அங்கிருந்து சிதறி ஓடினர்.

இதனைத் தொடர்ந்து வட்டக்கச்சிப் பகுதியிலும் விசுவமடுப் பகுதியிலும் புக்காரா விமானங்கள்குண்டு வீச்சை நடாத்தின.

# விளையாட்டுப் போட்டிகள்

(தொல்புரம்)

தேசிய சர்வோதய சிரமதான இயக்க ஆதரவுடன் இயங்கும் பாலர்பாடசாலைக்கான விளையாட்டுப்போட்டிகள் அண்மையில்நடைபெற்றன.

நல்லூர் தெற்கு சனசமூக நிலைய முன்றலில் இடம் பெற்ற இவ் விளையாட்டுப் போட்டி நிலையத் தலைவர் க. நாகேந்திரம் தலைமையில் நடைபெற்றபோது சர்வோதய மாவட்ட இணைப்பாளர் திரு. பா. செல்வரத்தினம் அவர்கள் கலந்து கொண்டு வெற்றியீட்டிய நிலையப் பாலர் பாடசாலை மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கினார். (41)

## மனைப் பொருளியல் செய்முறை

(யாழ்ப்பாணம்)

1993 ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற க. பொ. த. உயர்தரப் பரீட்சையின் மனைப் பொருளியல் பாடத்திற்கான செய்முறைப் பரீட்சை எதிர்வரும் 9ஆம், 10 ஆம், 11ஆம் திகதிகளில் யாழ் கோப்பாய் அரசினர் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் தபாலில் சேர்க்கப்பட்டிருப்பதாகவும் பாடசாலை மாணவர்களுக்கான அனுமதி அட்டைகளை பாடசாலை அதிபர்கள் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் போதனா ஆசிரியர் திருமதி இராமநாதனிடமிருந்து பெற்றுக் கொள்ளுமாறும் பிரதேச கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி அறிவித்துள்ளார்,

### பதிவு

முறைப்படுத்தத் தவறும் விடுதி உரிமையாளர்களைக் கண்டறிந்து அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்காக பொலிஸ் திணைக்களம் விசேட பொலிஸ் அதிகாரிகளைக் கொண்ட குழுக்களை நியமித்துள்ளது இக்குழுவில் பல சிரேஷ்ட, கனிஷ்ட பொலிஸ் அதிகாரிகள் கடமையாற்றுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அடையாளம் காணப்பட்டது

ஆவரங்கால் 10ஆம்கட்டைப் பகுதியிலிருந்து மீட்கப்பட்ட ஆணின் சடலம் உடுப்பிட்டியை பிறப்பிடமாக கொண்டவரும் சண்டிலிப்பாய் மத்தியை வசிப்பிடமாக கொண்டவருமான சின்னப்பு திருநாவுக்கரசு என்பவருடையது என அடையாளம் காணப்பட்டுள்ளது

### சாவகச்சேரி

இவ் அதிகரிப்பை விட பல மடங்கு அதிகரித்த விலையில் இவ் அத்தியாவசியப்பொருள்களை மேற்படி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் விற்கப்பட்டு வந்தமை தெரியவந்துள்ளது.

கீழ்வரும் பொருள்கள் இவ்வாறு அதிகரித்த விலையில் விற்பனை செய்யப்பட்டன. அவற்றின் கொழும்பு விலையும், சில்லறைவிலையும் தரப்பட்டுள்ளன. மேலதிக விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

மாறி பிஸ்கட் (ஒருபெட்டி) 96.20 — 180.00, நைஸ் பிஸ்கட் (ஒருபெட்டி) 143.25 —300.00, சொக் கிறீம் பிஸ்கட் (ஒருபெட்டி) 173.75 — 350.00, ஒரேஞ் கிறீம் பிஸ்கட் (ஒருபெட்டி) 166 00 — 350.00, மல்லி (ஒருகிலோ) 36.50 — 60.00, நற்சீரகம் (ஒருகிலோ)130.00 — 180.00, சோம்பு (ஒருகிலோ) 50.00— 70.00, சர்க்கரை(ஒருகிலோ) 31.00 — 45 00, சயிக்கிள் ரயர் (ஒன்று) 108.00 — 140.00, சயிக்கிள் ரியூப் (ஒன்று) 43.85—60.00;